[1990 சனவரி, 27

(அ) மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி, பம்ப் ஆப்ப ரேட்டர்களுக்கு அரசு அறிவித்துள்ள பொங்கல் பரிசுத் தொகை வழங்கப்படாதது குறித்து.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பொங்கல் பரிசாக அரசு ஊழியர்களுக்கும், ஊராட்சிகளிலே பணியாற்றுகின்ற ஊழி யர்களுக்கும், அரசு உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கும், நிரந்தரம் ஆக்கப்பட்டவர் களுக்கும், நிரந்தரம் ஆக்கப்படாதவர்களுக்கும் ரூ. 400 தரப் பட வேண்டும் என்று அரசு ஆணை தெளிவாகக் குறிப்பிடு கின்றது. அதுபோல் நிரந்தரம் ஆக்கப்படாதவர்களாக இருந் தாலும் கூட, தினக்கூலி பெறுகின்றவர்களாக இருந்தாலும் கூட 240 நாட்களுக்கு மேலாகப் பணியாற்றியிருந்தால் அந் தப் பரிசுத் தொகையைக் கொடுக்க வேண்டும், கருணைத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணை யில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊரக வளர்ச்சி ஆணையாளர், குடிநீர்த் தொட்டிக்குத் தண்ணீர் விடுகின்ற மோட் டார் இயக்குபவர்களுக்கு இந்தப் பரிசுத் தொகை கிடைக் காது, அவர்களுக்குத் தரக்கூடாது என்று அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். இதனால் பல்வேறு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பம்ப் இயக்குபவர்களுக்கு இந்த ஆண்டு அந்த 400 ரூபாய் பரிசுத் தொகை கிடைக்கவில்லை. பல் வேறு பஞ்சாயத்து யூனியன்களிலேயும், ஊராட்சிகளிலேயும் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டும் சரி, அதற்கு முன்பு 2 ஆண்டுகளும் சரி, கடந்த 3 ஆண்டுகளாக அவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே இந்த ஆண்டும் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தண்ணீர் பம்ப்பை இயக்குபவர்களுக்குப் பரிசுத் தொகை கிடைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10.45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடந்த இரண்டு, மூன்று நாட்களாகவே நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இது குறித்து என்னிடத்திலே பேசி வந்த காரணத்தினாலே இப்போது கேட்கக்கூடும் என்று எதிர்பார்த்து சில புள்ளி விவரங்களோடு வந்திருக்கிறேன்.

தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்குவது பற்றி பம்ப் ஆப்பரேட்டர்கள் சங்கத்தின் வேண்டுகோள் மனு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி பம்ப் ஆப்பரேட்டர்கள் அரசு சிப்பந்திகள் அல்ல. ஊராட்சி

(1990 சனவரி, 27) [டாக்டர் மு. கருணாநிதி]

ஒன்றியப் பணியாளர்களும் அல்ல. ஊராட்சிகளின் முழுநேரப் பணியாளர்களும் அல்ல நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய விகிதப் பணியாளர்களும் அல்ல, ஆனால் ஊராட்சிகளில் பணிக்கூலி பெறுபவர்களாக, ஊராட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்டு, ஊராட்சி நிதியிலிருந்து பணிக் கூலி அளிக்கப்படுகின்றவர்கள். இவர்கள் ஊதியம் பெறும் நிர்வாகப் பணியாளர்கள் அல்லவ்வ அல்ல. இந்தப் பணக்கூலியும் ஒரே சீராக இல்லாமல், ஊராட்சிக்கு ஊராட்சி மாறுபட்ட விதத்தில், ரூபாய் 30 முதல் ரூபாய் 150 வரை அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பம்ப் பணியாளர்களின் பணி, மின்விசை ஸ்விட்ச்சுகளை ஏற்றுவதும், அவற்றை அணைப்பதும்தான். இவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பொங்கல் பரிசு வழங்கவேண்டாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இதுவரை எந்த ஆண்டிலும் பொங்கல் பரிசு அவர்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும் பொங்கல் பரிசு மேற்படி பணியாளர்களுக்கு வழங்குவது என்றால், ரூபாய் 400 வீதம் 19,000க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு 76 இலட்சம் ரூபாய் செலவாகும். இச்செலவினம் ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படவேண்டும். சில ஊராட்சிகளில் 4 மேல்நிலைத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்கள் உள்ளதால், அந்த ஊராட்சிகளுக்கு 1600 ரூபாய் வரை செலவினம் மேற்கொள்ள நேரிடும். இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்துதான் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் கடலோரக் கிராமங்களில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள உயிர்சேதம் மற்றும் ஏனைய சேதங்களையொட்டி மேற்கொள்ள வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் 7—1—90 அன்று கடுமையான புயலின் காரணமாக, கடலோரக் கிராமங்களாகிய நம்புதாழை, உள்ளிமலை, காரங்காடு ஆகிய கிராமங்கள் கடுமையாகப்பாதிக்கப் பட்டிருக்கின்றன. நம்புதாழையிலிருந்து இரண்டு படகுகளிலே சென்றவர்கள் மொத்தம் 13 நபர்கள் அப்போது புயலில் சிக்கி இறந்திருக்கிறார்கள். அங்கே அரசு ஆரம்ப நிலையிலே புயல் அறிவிப்பை வானொலி மூலமாகவோ மற்ற எந்தச் செய்திகளின் மூலமாகவோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவித்திருந்தால் அந்த 13 பேர்களுடைய உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம். அந்தக் கிராமங்களிலே பல படகுகள் சேதம் அடைந்திருக்கின்றன. முழுமையாக ஆயிரக்கணக்கான வலைகள் தொலைந்து போய்